# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2202/2 - 2020 නොවැම්බර් මස 16 වැනි සඳුදා - 2020.11.16

*2202/2 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 16 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில், பஸ்பாகே கோரலே பிரதேச செயலாளர் பிரிவில், 1097 ஆம் இலக்க, கெந்தோபிட்டிய கிராம அலுவலர் பிரிவின், ஹைன்போர்ட் குடியிருப்புக் கிராமத்தில் அமைந்துள்ள, கண்டி மாவட்ட சிரேட்ட நில அளவை அத்தியட்சகரினால் 2020.09.07 ஆந் திகதி அளந்து தயாரிக்கப் பட்ட மு. பி. மஹ 6999 ஆம் இலக்க ஹைன்போர்ட் வத்த எனும் காணியின் விரம் :

1. **துண்டு இல. 01 - காணியின் பெயர் : ஹைன்போர்ட்வத்த; விஸ்தீரணம் : 2.5326 ஹெக்டயார்**

வடக்கு : வீதி (வீதி அபிவிருத்தி அதிகார சபை); கிழக்கு : வீதி (வீதி அபிவிருத்தி அதிகார சபை) மற்றும் காணித் துண்டு இல. 02; தெற்கு : காணித் துண்டு இல. 02 மற்றும் தோட்ட வீதி; மேற்கு : தோட்ட வீதி மற்றும் வீதி (வீதி அபிவிருத்தி அதிகார சபை).

2. **துண்டு இல. 03 - காணியின் பெயர் : ஹைன்போர்ட்வத்த; விஸ்தீரணம் : 3.6548 ஹெக்டயார்**

வடக்கு : காணித் துண்டு இல. 02 மற்றும் வீதி (வீதி அபிவிருத்தி அதிகார சபை); கிழக்கு : வீதி (வீதி அபிவிருத்தி அதிகார சபை); தெற்கு : மு. பி. ஏ. 1120 இன் 34 ஆவது காணித் துண்டு, காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு உரிமை கோரும் ஹைன்போர்ட் வத்த மற்றும் தோட்ட வீதி; மேற்கு : தோட்ட வீதி, காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு உரிமை கோரும் ஹைன்போர்ட் வத்த மற்றும் காணித் துண்டு இல. 02.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 20 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு நாவலப்பிட்டிய பஸ்பாகே கோரலே பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்ததற்கான நட்டஈடு பற்றிய

அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2021 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சி. கே. அமரகோன்,
பிரதேச செயலாளர்,
பஸ்பாகே கோரலே - நாவலப்பிட்டிய.

பிரதேச செயலகம்,
நாவலப்பிட்டிய,
2020, நவெம்பர் 11.

11 - 372

---

திருத்தம்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

எனது இல.: பீடீ/பீடீ/எல்என்டீ/3/5/18-940.

காணி எடுத்தல் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் 1979/29 ஆம் இலக்க, 2016.08.10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் 7 ஏ பக்கத்தில் இறுதி வரைபட இல. 80, பிற்சேர்க்கை இல. 55, தாள் இல. 51 இற்கு உரித்தான காணித் துண்டு இல. 825 ஆனது மீண்டும் இறுதி வரைபட இல. 80, பிற்சேர்க்கை இல. 59, தாள் இல. 55 இற்கு உரித்தான காணித் துண்டு இல. 940 விஸ்தீரணம் 0.0005 ஹெக்டயார் என அளவிடப்பட்டுள்ளது. அந்த அளவீடானது இறுதி வரைபட இல. 80, பிற்சேர்க்கை இல. 66, தாள் இல. 62 இற்கு உரித்தான காணித் துண்டு இல. 1097 மற்றும் 1098 எனப் பிரிக்கப்பட்டுள்ளது என இத்தால் அறியத்தருகின்றேன்.

**காணித் துண்டு இல. 940 இன் பிரிவுகள்**

01. **துண்டு இல. 1097**
காணியின் பெயர் : பன்னக்கெதரவத்த, வரிப்பண இல. 324/1, பஸ்சர வீதி; விபரம் : தரிசு நிலம்; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : இல. 84, பஸ்சர வீதி, ஹிந்தகொட, பதுளையில் வசிக்கும் வெதசிங்ஹ ஆரச்சிலாகே பத்மஷீலி ஜயலதா த சில்வா; விஸ்தீரணம் : 0.0004 ஹெக்டயார்.

02. **துண்டு இல. 1098**
காணியின் பெயர் : பன்னக்கெதரவத்த, வரிப்பண இல. 324, பஸ்சர வீதி; விபரம் : தரிசு நிலம்; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : இல. 84, பஸ்சர வீதி, ஹிந்தகொட, பதுளையில் வசிக்கும் வெதசிங்ஹ ஆரச்சிலாகே சாந்தி த சில்வா; விஸ்தீரணம் : 0.0001 ஹெக்டயார்.

டீ. எம். எல். எச். திசாநாயக்க,
பிரதேச செயலாளர்,
பதுளை.

பிரதேச செயலகம்,
பதுளை,
2020, ஒற்றோபர் 06.

11 - 373